*1975 நவம்பர் 7]*

**ஆத்தூர் முல்லைவாடி சாலையில் பாலம்.**

** 240 வினா—***திரு. வி. பழனிவேலு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல், ஒன்றியம்,** ஆத்தூர் ஒன்றியம் இரண்டின் எல்லைக்கோட்டில் உள்ள ஆத்தூர்-முல்லைவாடி வழி காட்டுக்கோட்டை பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு** திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

**திரு. வி. பழனிவேலு: ஆத்தூர் ஒன்றியம், தலைவாசல்** ஒன்றியம் ஆகிய இரண்டின் எல்லைக்கோட்டில் காட்டுக்கோட்டைப் பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் காட்டாற்றில் தண்ணீர் வருகின்ற நேரத்தில் இருபது முப்பது கிராமங்கள் பாதிக்கப் **படுகின்ற சூழ்நிலை இருப்பதால், இதை அரசு பரிசீலனை செய்து** அங்கே பாலம் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தக் கட்டாறு என்கிற காட்டாற்றுக்குப் பாலம் கட்ட ஒரு லட்சம் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வருங்காலத் திட்டங்களில் இதைச் சேர்க்கலாமா என்பது பற்றி யோசிக்கப்படும்.

**திருப்புவனம் ஒன்றியப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்.**

* 241 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோனையா :** திருப்புவனம் ஒன்றியத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அங்கே வீடு கிடைக்காது, மதுரையில் குடியிருந்துகொண்டு வருவதால் அலுவலகத்திற்குச் சரியான